2009 ஜூலை 21] [திரு. கு. பாண்டுரங்கன்]

வேளாண் பணிகளுக்காக மின்சாரம் விநியோகிக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதிக்காக, மின்சார இலாகா மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுடைய அனுமதியோடு அவ்வாறு விதிவிலக்களித்து 16 மணி நேரம் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு முழுவதும் அவ்வாறு விதிவிலக்களித்து, 16 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொன்னால், 19 இலட்சம் பம்பு செட்டுகள் இருக்கக்கூடிய தமிழ்நாட்டில், மேலும் ஒரு ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவைப்படும். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதுகுறித்துப் பரிசீலிக்க இயலாத நிலையில் இருக்கிறோம். இருந்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்தாலோசித்து ஏதாவது செய்ய முடியுமென்றால், அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடும்.*

(ஈ) தீப்பெட்டித் தொழில், பொட்டாஷியம் குளோரேட் மூலப் பொருள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.*

திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில்தான் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கான* raw material *ஆன* potassium chlorate *தொழிற்சாலைகள் தமிழகத்தில் 40–க்கும் மேலாக இருந்தன. ஆனால், தற்போது ஒன்றுகூட இல்லை. காரணம், தமிழ்நாட்டில்* H.T. *இண்டஸ்ட்ரிக்கு மின்சாரக் கட்டணம் மிகவும் அதிகமாக, அதாவது ஒரு யூனிட்டுக்கு ரூ.4.20–ம்* maximum demand-*க்கு 300 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. அதனால் குளோரேட் தொழிற்சாலைகள் அனைத்தும் கேரளாவிலும், பாண்டிச்சேரியிலும்தான் உள்ளன. ஆனால், அந்த மாநிலங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளேயில்லை. தமிழகம் முழுவதும் தீப்பெட்டித் தொழிலுக்கு பிரதான மூலப் பொருளாக விளங்கும் பொட்டாஷியம் குளோரேட்டுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால், எங்கள் தென் தமிழகத்தில்*

தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், தீப்பெட்டித் தொழில் சிறு முதலீட்டாளர்களும் மிகவும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். அதனால், அந்தப் பகுதியில் பதட்டமானதொரு சூழ்நிலையில் தினமும் உண்ணாவிரதம், மறியல் மற்றும் போராட்டம் நடக்கிற சூழல் இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான தீப்பெட்டித் தொழிலாளர்கள் வேலையிழந்து இன்றைக்கு நடுத்தெருவில் நிற்கிறார்கள். எனவே, உடனடியாக பொட்டாஷியம் குளோரேட் தட்டுப்பாட்டை நீக்கி மீண்டும் தீப்பெட்டித் தொழிலுக்கு உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கிடுவதற்காக இந்த அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

(உ) கடலூர் மாவட்டம், தீ விபத்துகளைத் தடுத்து, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் மற்றும் கான்கிரீட் வீடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடலூர் மாவட்டத்தில், கடந்த இரண்டாம் தேதியிலிருந்து இன்று வரை பல இடங்களில் நிறைய வீடுகள் எரிந்துவிடுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. அதாவது, கடந்த 2–7–2009 அன்று காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி எல்லையில், கோட்டைமேடு என்ற இடத்தில் 21 வீடுகளும், அதைத் தொடர்ந்து என்னுடைய தொகுதியில் செங்கல்மேடு என்ற கிராமத்தில் 41 வீடுகளும், 15 ஆம் தேதியன்று, என்னுடைய தொகுதியில், எணமங்கலம் என்ற கிராமத்தில் 80 வீடுகளும், சி. சாத்தமங்கலம் என்ற என்னுடைய தொகுதியியை சேர்ந்த கிராமத்தில் 16 வீடுகளும், காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்தில் வானமாதேவி என்ற ஊரில் 49 வீடுகளும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: இன்று, கீரப்பாளையத்தில் 8 வீடுகளும் எரிந்து சாம்பலாகியிருக்கின்றன. இந்தத் தீ விபத்துகளில் காட்டுமன்னார்கோவிலைச் சேர்ந்த சந்தானம்மாள் என்ற வயது முதிர்ந்த பெண்மணி மரணம் அடைந்திருக்கிறார்.